தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 1, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஆகஸ்ட் 17, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை எண்ணி இடத்தால் செயின்."

செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாகச் சிந்தித்து தக்க இடம் அறிந்து செய்தால், அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

துணை மின் நிலையம்

***1174—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, சின்னதடாகம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் கூறிய சின்னதடாகம் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று அறிவாளியின் ஆட்சியில் தலைநகரம் மட்டுமல்ல, தமிழகம் மட்டுமல்ல, தலைமைச் செயலகமே இருளில் மூழ்கிய கதையை இந்தியாவே அறியும். ஆனால், அம்மாவின் ஆட்சியின் சாதனை எது என இப்போது அவர்களுக்குப் புரியும். இருண்டு கிடந்த தமிழகத்தை மீட்டெடுத்து நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்த கவுண்டம்பாளையம் தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்காக அயராது உழைத்திட்ட கழக நல்ல உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட சின்னதடாகம் ஊராட்சியிலே செங்கல் சூளை அதிகமாக உள்ளதால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அங்கு வருங்காலத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்யப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, என்னுடைய தொகுதிக்குட்பட்ட சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட இடிகரை பேரூராட்சிப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2016 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சின்னதடாகம் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். அவருடைய தொகுதியிலேயே இன்னொரு இடத்தில், சர்க்கார் சாமக்குளத்தில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே துடியலூர் பகுதியிலுள்ள 110/22 கிலோ வாட் மின் நிலையத்திலிருந்து சின்னதடாகம் பகுதிக்கு தேவையான அளவுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், சின்னதடாகம் பகுதியிலே இப்பொழுது 97 சென்ட் இடம் பார்க்கப்பட்டிருக்கிறது. சாத்தியக்கூறுகள் இருப்பின், அதை ஆய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் தொகுதிக்குட்பட்ட கூடலூரில் குறைந்த மின்னழுத்தம் இருக்கின்ற காரணத்தால், அம்மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 110* KV *துணை மின் நிலையம் அமைப்பதற்கு, 65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, பணி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அந்தப் பணி பாதியில் நின்றுகொண்டிருக்கிறது. நான் இதற்கு முன்னால் இருந்த முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் இந்த அவையில் இதே கேள்வியைக் கேட்கும்போது, வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது, வழக்கை விரைந்து முடித்து நிறைவேற்றித் தருவோம் என்று சொன்னார்கள். ஆனால், கிட்டத்தட்ட 6, 7 ஆண்டுகள் ஆகியும், அப்பணியை நிறைவு*

செய்யவில்லை. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்ற காரணத்தினால், பணியை தடைசெய்யக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஏதாவது specific–ஆக direction இருந்தாலொழிய, மற்றபடி அதை நிறைவேற்றலாம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, உடனடியாக அந்தப் பகுதியில் உள்ள குறைந்த மின்னழுத்தத்தை நிறைவு செய்யக்கூடிய பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, இந்தப் பணியை விரைந்து செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது, 6, 7 வருட காலமாக நீதிமன்றத்திலே வழக்குகள் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறபோது, நாம் அந்தப் பணியைத் தொடருவோமென்று சொன்னால், மீண்டும் அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று நம்மீது அவதூறு வழக்குப் போட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அதனுடைய தன்மையை ஆராய்ந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தப் பணிகளை வேகப்படுத்துவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் 10 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. எங்கேயும் மின்னழுத்தம் குறைவாக இல்லை. பல்வேறு பகுதிகளிலேயிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு அந்தப் பகுதிக்கு வருகின்ற காரணத்தினால், போதிய துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. அந்தப் பணியை மட்டும் வேகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 17]

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே உரையாற்றுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இளைய சமுதாயத்தின் எதிர்காலம், நமக்கு நாமே நாயகர், ஆற்றல்மிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்பு தளபதியார் அவர்களுக்கும் எனது பணிவு கலந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

என்னை ரிஷிவந்தியம் தொகுதியில் 21,350 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த எனது உயிரினும் மேலான ரிஷிவந்தியம் தொகுதி வாக்காளர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக நிருவாகிகளுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட ஈருடையாம்பட்டு, சுத்தமலை, ஆர்கவாடி, அரும்பராம்பட்டு, வடமாமந்தூர், சீர்பதநல்லூர், இளையனார்குப்பம், சீர்பநந்தல், ஜம்படை, திருவரங்கம், கல்லிபாடி, சிறுபனையூர், மணியந்தல், கரையம்பாளையம் போன்ற 20–க்கும் மேற்பட்ட கிராமங்களில் குறைந்தழுத்த மின்சாரம் (*Low Voltage*) உள்ளதால், இந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகையால், இந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை 43 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலே மின்மாற்றியிலே பளு அதிகமாக இருக்கிறதென்று சொன்னால், மின்மாற்றி மாற்றிக் கொடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அனைத்துப் பகுதிகளிலும் மின்னழுத்தம் குறைவாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே, ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருப்பின், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத்*

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

பல அடுக்கு வாகன நிறுத்தம்

***3098—திரு. ப. சத்திய நாராயணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராய நகர் பகுதியில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள சிவஞானம் தெருவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் ஆறு தளங்கள் கொண்ட பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*